# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 64/2020

நாள்: 11.08.2026

வா.சா. 1 – ராஜதுரை

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 11–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**7 மற்றும் 9 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கிரையம் நடைபெற்ற தேதியில் 7 மற்றும் 9 ம் பிரதிவாதிகள் வழக்கு நிலுவையில் இருப்பது தெரியும் என்று நிரூபிக்கும்படி எந்த ஆவணங்களும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ளது பற்றி பிரதிவாதிகளிடம் நேரடியாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னேன். சொன்னேன் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அறிவிப்பு கொடுத்துள்ளோம். விற்பனைக்கு முன்பாகவே அந்த சொத்தை பொருத்து இடைக்கால உத்தரவு எதுவும் பெற்றோமா என்றால், வழக்கு தாக்கல் செய்யும்போதே தடை உத்தரவு கோரிதான் தாக்கல் செய்தோம்.

**10–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / R. கார்த்திகேயன்
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.